**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 113/2020 |
| Name | : | Balamurugan |
| P.W. | : | 4 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொமரலிங்கத்தில் வசிக்கிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். 20.05.2020ம் தேதி காலை சுமார் 10 மணி அளவில் நானும், எனது அண்ணன் செந்தில்குமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சாமராயப்பட்டி – பெருமாள் புதூர் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது நால் ரோடு அருகே போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் செந்தில்குமார் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜரில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போன பாலகிருஷ்ணன் எனது உறவினர் இல்லை. நான் கையொப்பம்

செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:43:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்